**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம், தேனி மாவட்டம்.**

**முன்னிலை: திரு.C.சங்கர், B.A. M.L. P.G.D.C.F.S.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**பெரியகுளம், தேனி மாவட்டம்.**

2025 **ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்** 13 **ஆம் நாள் திங்கள்கிழமை.**

CNR.No.TNTH09 000027 2024
EXECUTION PETITION No.04/2024
- in -
CNR.No.TNTH09 000222 2021
ORIGINAL SUIT No.233/2021
-

1. **ரா.ரத்தினவேல் பாண்டியன்.**
2. **ர.வேலுத்தாய்.**
3. **ர.பெல்லியப்ப பாண்டியன்.**
4. **த.தனலட்சுமி.**
5. **அ.சுப்புலட்சுமி.** … **மனுதாரர்கள்/ வாதிகள்**

**// எதிர் //**

**கே.எஸ்.ஈஸ்வரன்.** … **எதிர்மனுதாரர்/ பிரதிவாதி**

*********

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 15.09.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.முத்துவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.இரத்தினம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள்

பரிசீலிக்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் இந்த நிறைவேறுதல் மனுவை கட்டளை 21, விதி 34 உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/வாதிகள் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள பாக்கி கிரைய தொகையான ரூ.19,00,000/-ஐ எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெற்றுக் கொண்டு மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேறுதல் மனுவில் கண்டுள்ள சுருக்கம் பின்வருமாறு**:

2. மனுதாரர்கள்/வாதிகள் தங்களது மனுவில் அசல் வழக்கினை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் 23.08.2023 ஆம் தேதி இந்நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளதாகவும், அசல் வழக்கு எண்.233/2021 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையில் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி, நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை ரூ.19,00,000/-ஐ பெற்றுக் கொண்டு வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் சார்பாக ஒரு விற்பனை ஆவணத்தை நிறைவேற்ற உத்தரவிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் பிரதிவாதி/எதிர்மனுதாரர் எவ்வித ஆவணமும் வாதிகள்/மனுதாரர்களுக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதி/எதிர்மனுதாரர் காலம் கடத்தி

வருகிறார் என்றும், எனவே நீதிமன்றமே மனுதாரர்கள்/வாதிகள் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள ரூ.19,00,000/-ஐ எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெற்றுக் கொண்டு கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

<u>**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் கண்டுள்ள சுருக்கம் பின்வருமாறு**</u>:

3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது எதிருரையில், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், மனு பாரா D-ல் மேல்முறையீட்டு பற்றிய விபரம் இல்லை என தெரிவித்துள்ளது தவறு என்றும், உரிய காலக்கெடுவிற்குள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முதல் மேல்முறையீட்டு AS (MD No.305/2023-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 28.11.2023 ஆம் தேதி மேற்படி மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு 04.12.2023 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் நோட்டீஸை மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுள்ளார்கள் என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய அசல் கிரைய பத்திரம் மற்றும் மூலப்பத்திரங்கள் அனைத்தும் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வசத்தில் உள்ளதாகவும், எனவே இந்த நிறைவேறுதல் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:

1. **இம்மனு அனுமதிக்கத்தக்கதா ?. என்பதேயாகும்.**

<u>**பிரச்சனை எண்.**1</u>.

6. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது,

7. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது,

8. இருதரப்பும் கேட்கப்பட்டது மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது எதிருரையில் குறிப்பிட்டுள்ள முதல் மேல்முறையீட்டு AS (MD No.305/2023 வழக்கில் தடை உத்தரவு பெற்று, எதுவும் இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144-ன் படி எப்போது வேண்டுமானாலும் மீண்டும் பழைய நிலைக்கு தீர்வு காண நடைமுறைகள் உள்ளது. இந்த நிறைவேறுதல் மனு கடந்த 01.02.2024 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, 02.02.2024 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக ஒருமுறை கூட இந்த நிறைவேறுதல் மனுவில் எவ்வித விசாரணையையும் மேற்கொள்ளாமல் நிலுவையில் இருந்து வந்துள்ள நிலையில், இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக கடந்த 23.04.2025 ஆம் தேதி முதல் 15.09.2025 ஆம் தேதி

வரை ஐந்து மாதங்களாக நிலுவையில் இருந்து வந்த நிலையில் கடந்த 15.09.2025 ஆம் தேதி எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கட்டாய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தபோது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதுவும் எடுத்துரைக்காத நிலையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவை பொறுத்தமட்டில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார். இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது எதிருரையில் பிரஸ்தாபித்ததுபோல் மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் இருந்து வரும் AS (MD) No.305/2023 என்ற மேல்முறையீட்டு வழக்கில் தடை உத்தரவு எதுவும் பெறாமல் காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்திலேயே இம்மனு விசாரணையை காலதாமதப்படுத்தியுள்ளார் என்று எடுத்துரைத்த மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் ஏற்கதகுந்ததாகவே உள்ளது. மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், நிறைவேறுதல் மனுக்களை 6 மாதக்காலத்திற்குள் தீர்வு காண வேண்டுமென தெரிவித்துள்ள இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/வாதிகள் நிறைவேறுதல் மனுவில் பரிகாரம் கோரியதுபோல் மனுப்படி உத்தரவு பிறப்பிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. முடிவாக, இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள கிரைய பாக்கி தொகையான ரூ.19,00,000/-ஐ எதிர்மனுதாரர்/பிரதிவாதி 13.11.2025 ஆம் தேதிக்குள் பெற்றுக் கொண்டு மனுச் சொத்தினை மனுதாரர்கள்/வாதிகளின் பெயர்களுக்கு கிரைய பத்திரம் எழுதி பதிவு

செய்து கொடுக்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. **மீண்டும் அழைக்க வாய்தா** 14.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு அதன்பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 **ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்** 13 **ஆம் நாள் திங்கள்கிழமையன்று** அவையறிய பகரப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.13 12:06:56 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**பெரியகுளம்.**

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை.

**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.13 12:07:00 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**பெரியகுளம்.**